வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க..எண்.5241/ஆ5 /2022 நாள் :15.12.2022

பொருள் காவல் – சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு– வேலூர் மாவட்டம் – மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளிகளில் வன்கொடுமை தடுப்பு மற்றும் சமூக நல்லிணக்க விழிப்புணர்வு கூட்டம் நடத்த ஒத்துழைப்பு நல்க கோருதல் – தொடர்பாக

பார்வை 1.காவல்துறை கூடுதல் இயக்குநர், சமூக நீதிமற்றும் மனித உரிமைகள் பிரிவு, சென்னை.6. அவர்களின் கடித எண்.பி2/3799/2022 நாள்.02.12.2022

2. இயக்குநர், பட்டியலில் கண்ட சாதியினருக்கான தேசிய ஆணையம் F.NO.3/20/Erode/2022 Res, நாள்.02.12.2022

3. வேலூர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.231/SJHR/VLR2022 நாள்.08.12.2022.

...........

பார்வையில் காணும் கடிதங்களுக்கிணங்க பள்ளி, கல்லூரி, அரசு அலுவலகம், பொதுமக்கள் கூடும் இடங்களில் வன்கொடுமை தடுப்பு மற்றும் சமூக நல்லிணக்கம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டம் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு அலுவலர்கள் நம் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் வன்கொடுமை தடுப்பு மற்றும் சமூக நல்லிணக்க விழிப்புணர்வு கூட்டம் நடத்த ஏற்பாடு செய்வதற்கு பள்ளித் தலைமை ஆசிரியர்களை தொடர்பு கொள்ளும் பொழுது போதிய ஒத்துழைப்பு நல்க அறிவுறுத்தப்படுகிறது. மேலும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாணவ / மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி நமது மாவட்டத்தை மனித உரிமைகள் போற்றும் சமூக நீதி நெறிகொண்ட சிறந்த மாவட்டமாக மாற்ற உறுதுணை நல்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவிலிருந்து காவல்துறை சார்பாக உயர் அதிகாரிகள் தங்கள் பள்ளிகளுக்கு வரும் பொழுது முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு. பார்வைக் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்.

1.மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை) வேலூர். தகவலுக்காக

2.மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், வேலூர் அவர்களுக்கு

{தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.}

காவல் துறை

அனுப்புநர்,
திரு.S.ராஜேஸ் கண்ணன்,இ.கா.ப.,
காவல் கண்காணிப்பாளர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

பெறுநர்,
முதன்மை கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

5241

ந.க.எண்: 231/SJHR/VLR/2022, நாள்: 08.12.2022.

ஐயா,

பொருள்: காவல் - சமுக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு- வேலூர் மாவட்டம் - மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளிகளில் வன்கொடுமை தடுப்பு மற்றும் சமுக நல்லிணக்க விழிப்புணர்வு கூட்டம் நடத்த ஒத்துழைப்பு நல்க கோருதல் - தொடர்பாக.

15 DEC 2022

பார்வை: 1. காவல் துறை கூடுதல் இயக்குநர், சமுக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, சென்னை - 06 அவர்களின் கடித எண்:B2/3799/2022 நாள்:02.12.2022

2. இயக்குநர், பட்டியலில் கண்ட சாதியினருக்கான தேசிய ஆணையம்,F.No.3/20/Erode/2022 Res, நாள்:02.12.2022

*********

பார்வையில் காணும் கடிதங்களில் பள்ளி, கல்லூரி, அரசு அலுவலகம், பொது மக்கள் கூடும் இடங்களில் வன்கொடுமை தடுப்பு மற்றும் சமுக நல்லிணக்கம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டம் சமுக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு அலுவலர்கள் நம் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் வன்கொடுமை தடுப்பு மற்றும் சமுக நல்லிணக்க விழிப்புணர்வு கூட்டம் நடத்த ஏற்பாடு செய்வதற்கு தங்கள் துறை அலுவலர்கள்/பள்ளி முதல்வர்கள்/ ஆசிரியர்கள் / பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆகியவர்களை தொடர்பு கொள்ளும் பொழுது போதிய ஒத்துழைப்பு நல்க அறிவுறுத்துமாறும், மேலும் அரசு அலுவலர்கள்/பள்ளி முதல்வர்கள்/ ஆசிரியர்கள் / பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ மாணவ மாணவியர்களுக்கு, விழிப்புணர்வு ஏற்படுத்தி நமது மாவட்டத்தை மனித உரிமைகள் போற்றும் சமுக நீதி நெறி கொண்ட சிறந்த மாவட்டமாக மாற்ற உறுதுணை நல்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு:-பார்வை கடித நகல்

காவல் கண்காணிப்பாளர்,
வேலூர் மாவட்டம்.